**காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு**
**6 மாத காலங்களில் ரூ. 31 கோடி கடனுதவி**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தகவல்**
**--------**

காஞ்சிபுரம் மாவட்டம் திருகழுகுன்றம் ஊராட்சி ஒன்றிய கொக்கிலமேடு ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 2 ஆயிரத்து 295 சுய உதவி குழுக்களுக்கும், ஆயிரத்து 49 தனிநபர்களுக்கும் மொத்தம் ரூ. 17 கோடியே 41 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான புதிய அரசு பதவி ஏற்றது முதல் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு எண்ணற்ற சலுகைகளை வழங்கியும், பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியும வருகிறார்கள். இதனிடையிலேயும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று, சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டி பல நலத்திட்ட உதவிகளை அறிவித்தார்கள். இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட சூலேரிகாட்டுகுப்பம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 3 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 145 வீடுகளை வழங்கினேன். மாநிலத்திலேயே 22 ஆயிரத்து 500 மகளிர் சுய உதவி குழுக்களை கொண்ட காஞ்சிபுரம் மாவட்டத்தில் , முதல் கட்டமாக ஆயிரத்து 546 மகளிர் சுய உதவி குழுக்களுக்க ரூ. 5 கோடியே 59 லட்சம் மதிப்பிலும், இரண்டாம் கட்டமாக 2 ஆயிரத்து 334 குழுக்களுக்கும், 931 தனிநபர்களுக்கும் ரூ. 8 கோடியே 27 லட்சம் மதிப்பிலும், மூன்றாம் கட்டமாக 348 குழுக்களுக்கும், 200 தனிநபர்களுக்கும் ரூ. ஒரு கோடியே 94 லட்சம் மதிப்பிலும் கடனுதவி வழங்கப்பட்டது. தற்போது 2 ஆயிரத்து 295 குழுக்களுக்கும், உடல் ஊனமுற்ற ஆயிரத்து 49 தனிநபர்களுக்கும் மொத்தம் ரூ.17 கோடியே 41 லட்சம் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்துவருகிறது. இதன் அடிப்படையில் சுய உதவி குழுக்கள் தங்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகளை பயன்படுத்தி பொருளாதாரத்திலும், சமூகத்திலும் முன்னேற வேண்டும்" எனத் தெரிவித்தார்.

விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் சிறப்புரையும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரதீப்யாதவ் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிமன்றத் தலைவர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.